# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 73 — 1973 අගෝස්තු 17 වැනි සිකුරාදා — 1973.08.17

73 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஒகத்து மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் .. | 167 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் .. .. | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு .. .. | 168 | வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | 168 |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — | பலவிதமானவை .. .. .. | — |


கவனிக்க.—விலங்கின அறுவை மருத்துவர், மருத்துவத் தொழிலர் ஆகியோர் பற்றிய (திருத்தம்) சட்ட மூலமும் கடன் இணக்கம் (திருத்தம்) சட்டமூலமும் புகையிலைவரி (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறை நிரப்பி களாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமைஅடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அலுவலகத்திற்கு சொந்தமான பதிவேடுகளை பொது மக்கள் பார்வையிடுவதற்காக அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் 9 மணி தொடக்கம் 3 மணி வரையிலும் சனிக்கிழமைகளில் 9 மணி தொடக்கம் 11 மணி வரையிலும் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணிவரையிலும், சனிக் கிழமைகளில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### "அ" அல்லது "ஆ" பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் "அ" பகுதியின் கீழ் வரும் விண்ணப் பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் "ஆ" பகுதி யின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் "ஆ" என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்களை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.


அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 05 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

**எதிர்ப்பு**

**பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினுல், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு ஹோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.**

(1) வியாபாரச் சின்னம் இல. 34,757. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 12 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : றன்ஹொற்றி பேடிகே திலகரட்ன, (றட்னசிறி மோட்டோர் ஸ்ரோஸ் என்பதாக வணிகஞ் செய்பவர்) இல. 29, பாக் வீதி, மினுவங்கொட ; மோட்டார் மாற்றுப்புக்களின் வியாபாரி. (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : —. (5) வகுப்பு : 50. (6) வியாபாரச்சரக்கு : ஒட்டும்பசைகள் (பசை). (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




ஆர். எல். த. சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1973 ம் ௵ மார்ச் ௴ 8 ந் உ.

8-819—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

## வியாபார உரிமை அடையாள அறிவிப்பு

### பிழை திருத்தம்

1972 ம் வருடம் பெப்ரவரி மாதம் 25 ம் திகதியைக் கொண்ட 14,999 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1968 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 12 ம் திகதியிட்ட 6 ம் வகுப்பைச் சார்ந்த வியாபார உரிமை அடையாள இல. 30,749 சம்பந்தமாக் கீழ்க்காணப்படும் இணைப்புக் குறிப்பு இவ்வாறு சேர்க்கப்படல் வேண்டும்.

"இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 30,745 உடன் இணைக்கப்படவிருக்கிறது."

ஆர். எல். த. சில்வா,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்,
அச்சிலன் சதுக்ககம்,
கொழும்பு, 1972 ம் ௵ ஒக்டோபர் ௴ 25 ந் உ.

8-761—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

### பிழை திருத்தம்

1973 ம் ஆண்டு மார்ச் மாதம் 9 ம் திகதியைக் கொண்ட 50 ம் இலக்க ஸ்ரீ லங்கா (இலங்கை) வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1962 ம் வருடம் மார்ச் மாதம் 7 ந் திகதியிட்ட 12 ம் வகுப்பைச் சேர்ந்த வியாபார உரிமை அடையாள இல. 23,324 சம்பந்தமான விளம்பரத்தில் குறிக்கப்பட்டுள்ள கூட்டுச் சேர்க்கை எண்கள், 16,590, 19,093 என்பதாகத் திருத்தம் செய்து வாசிக்கப்படல் வேண்டும்.

ஆர். எல். த. சில்வா,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1, 1973 ம் ௵ மே ௴ 8 ந் உ.

8-827—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

## வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள்

### மாதிரி வடிவக் கட்டளைச் சட்டம்

(அதிகாரம் 153)

மாதிரி வடிவக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 153) உட்பிரிவு 32 ன் கீழ் இயற்றப்பட்ட மாதிரி வடிவ விதிகளுக்கிணங்க த காலிங் புறுவறிஸ் லிமிட்டட் என்னும் பெயரில் நான்காம் வகுப்பில் உள்ள D14.41 ஆம் இலக்க மாதிரி வடிவத்தின் பதிப்புரிமை மேலும் 1973 ஆம் வருடம் ஜூலை மாதம் 21 ஆம் திகதியிலிருந்து இரண்டாம் தவணையாக ஐந்து வருடங்களுக்கு முறையாக நீடிக்கப்பட்டிருக்கிறதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆர். எல். த. சில்வா,
மாதிரி வடிவப் பதிவாளர்.

கொழும்பு, 1973 ம் ௵ பெப்ரவரி ௴ 28 ந் உ.

8-824—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 27.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 3.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 10.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 17.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 24.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 31.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 7.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 14.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 21.9.13 | வெள்ளி | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.